S.no.7(B) 177 199

# உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்

## அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு. இரா. வாழவந்தான்., பிஇ

## திட்ட அனுமதி

## நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண். **6489 /2019** /உதிகு நாள்: **04.06.2021**

திட்ட அனுமதி எண். **206/2021**

உள்ளாட்சியின் பெயர்: மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சி

பொருள் : **திட்ட அனுமதி - மனைப்பிரிவு** - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - மதுக்கரை வட்டம் - மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள். 302/1, 304/3A, 305/4C1,305/4B, 306/5, 307/1, 307/2, மற்றும் 308/1A - ல் 9.87 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. மனுதாரர்கள் . திரு. R.வசந்தகுமார் மற்றும் திருமதி. V.தமயந்தி , கோவை அவர்கள் விண்ணப்பம் நாள் 11.11.2019

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயலாணை கடிதம் ந.க.எண். 890/2020/TCP3 நாள்.01.04.2021
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 7978/2012/எல்ஏ2 நாள்.19.4.2019
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 13686/2017/எல்ஏ1 நாள்.8.9.2019
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 22018/2017/எல்ஏ2 நாள்.28.9.2017
6. அரசாணை எண.18 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல்துறை நாள் 04.02.2019
7. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல்துறை நாள் 31.01.2020
8. மனுதாரர் வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்ட கடிதம் பெறப்பட்ட நாள்- 27.04.2021

*****

உத்தரவு:

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம் - மதுக்கரை வட்டம் - மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள். 302/1, 304/3A, 305/4C1,305/4B, 306/5, 307/1, 307/2, மற்றும் 308/1A - ல் 9.87 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் செயலாணை கடிதம் மூலம் தொழில் நுட்ப இசைவு வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.இ.எண்.77/2021** என எண்ணிடப்பட்டும் இவ்வலுவலக **திட்ட அனுமதி எண்.206/2021** என எண்ணிடப்பட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

**மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.**

## சிறப்பு நிபந்தனைகள் -1

1. மனைப்பிரிவில் தார்சாலைகளாக அமைத்தும், சாலைகளுக்கான இடம் மற்றும் அணுகுசாலை, விஸ்தரிப்பு பகுதி, பூங்கா, இடம் ஆகியவற்றை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக உள்ளாட்சியிடமிருந்து சான்று பெறப்பட்டதன் பேரில் இம்மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது இதன் பின்னர் மனைப்பிரிவில் தேவையான பாலங்கள் சாக்கடை, வடிகால் துபபுரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளதையும் இட நேராய்வு மூலம் உறுதி செய்த பின்னரே உறுப்பினர் செயலர் அவர்களால் இம்மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுவதை உள்ளாட்சிக்கு தெரிவித்து வரைபடங்களை அனுப்பி வைக்க வேண்டும்.
2. பார்வை 6-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறையில் ச.எண்கள் உட்பிரிவுகள் செய்து அதற்கான ஆவணங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.
3. பார்வை 6-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி " The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development dated.22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise market, book

Sell of offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after Registration the Real Estate Project with the Real Estate Authority-ன் படி நடவடிக்கை தொடருமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

4. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்யஉரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

## பொது நிபந்தனைகள்

1. திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)- கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

2. பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

3. கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு (i) திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ, (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. (i) அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும். (ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5. சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்

6. மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன் படுத்தப்பட வேண்டும்.

7. (i) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும். (ii) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும். (iii) உத்தேச குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act) -ன்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

9. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

10. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத்தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

11. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தமசொந்த செலவில் செய்துதர வேண்டும்.

12. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

13. The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

14. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

15. கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

16. கோயம்புத்தூர் பகுதியானது Seismic Zone - III ஆக வரையறுக்கப்பட்ட பகுதியில் அமைவதால் கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

17. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (**மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சி** உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

18. **மதுக்கரை** சிறப்புநிலை பேரூராட்சி எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப் படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

19. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

உறுப்பினர் செயலர் /இணை இயக்குநர்
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர்

04/06/2021

**இணைப்பு**

முத்திரையிட்ட வரைபடம் - 2
நிபந்தனை பழவம் - 2

**பெறுநர்**

செயல் அலுவலர்,
மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சி ,
கோயம்புத்தூர்.

**நகல் மனுதாரர் (உள்ளாட்சி மூலமாக)**

1. Mr.R.Vasantha KUmar & Mrs. V. Dhamayanthi,
   D.NO.14, L.G.B.. Colony,
   SIDCO,
   Coimbatore - 641 021
   ph.98426-85653
   email.info@karpagam.com

2. Chair Person,
   Tamilnadu Real Estate Regulatory Authority,
   CMDA Tower - II 1st Floor , No.1A,
   Gandhi Irwin Bridge Road,
   Egmore ,
   Chennai - 600 008

S-r2/T.C. (185)

(207)

## மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு.அர. பார்த்திபன்

ந.க.எண். 657/2021.

நாள்: 28.06.2021.

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் – மதுக்கரை பேரூராட்சி – க.ச.எண். 302/1, 304/3A, 305/4C1, 305/4B, 306/5, 307/1, 307/2 மற்றும் 308/1Aல் – 9.87 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க – திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது – நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவு பிறப்பித்தல் –தொடர்பாக.

பார்வை :
1) மனுதாரர் திரு. R. வசந்தகுமார் மற்றும் திருமதி. V. தமயந்தி விண்ணப்பம் நாள்.11.11.2019.
2) அரசாணை எண்.18 ந.நி.(ம) கு.வ. துறை நாள்.17.10.2020.
3) கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக இணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.6489/2019/உ.திகு ம.வ./கோ.உ..தி.கு எண்.77/2021 திட்ட அனுமதி எண்.206/2021 நாள்.04.06.2021.
4) மதுக்கரை பேரூராட்சி மன்ற தீர்மான எண்.39/2021 நாள்.24.06.2021.

* * * * * * * * *

**உத்தரவு:**

கோவை மாவட்டம் மதுக்கரை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12, க.ச. எண். 302/1, 304/3A, 305/4C1, 305/4B, 306/5, 307/1, 307/2 மற்றும் 308/1Aல் 9.87 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள மனைப்பிரிவு குறித்து பார்வை 1–ல் காணும் விபரப்படி மனுராரரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் உறுப்பினர் செயலர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி உத்தேச மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடங்களை, பேரூராட்சிக்கு ஒப்படை செய்ய தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, மதுக்கரை சார்பதிவக தான சாசன பத்திர எண்.7202/2020 நாள்.04.12.2020ன்படி மேற்படி உத்தேச மனைப்பிரிவில் உள்ள 11889.19 சதுர மீட்டர் பரப்பளவுள்ள சாலைகள், 2990.67 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பொது ஒதுக்கீடு இடமும், தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு 144.66 சதுர மீட்டர் இடமும் இப்பேரூராட்சிக்கு தானமாக ஒப்படை செய்யப்பட்டதைத்தொடர்ந்து, பார்வை 3–ல் காணும் இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை ஆணையில் இம்மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.இ எண்.77/2021–ன்படி தொழில்நுட்ப அனுமதியும், 206/2021–ன்படி திட்ட அனுமதியும் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு பார்வை 4ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவு உரிமையாளரால் தார்சாலை, வடிகால் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் மதுக்கரை பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.12, க.ச. எண்.302/1, 304/3A, 305/4C1, 305/4B, 306/5, 307/1, 307/2 மற்றும் 308/1Aல் 9.87 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு, பார்வை 3ல் கண்டுள்ள, இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 4 முடிய உள்ள சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும், 1 முதல் 19 முடிய உள்ள மனைப்பிரிவு பொது நிபந்தனைகளுக்குட்பட்டும், 1 முதல் 20 முடிய உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டும், மனைப்பிரிவு அங்கீகார வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

209

1. அங்கீகாரம் பெறப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் மனையிடத்தில் பொதுமக்களின் பார்வைக்கு தெளிவாகத் தெரியும் வகையில் 6 X 4 அளவுள்ள நிரந்தர அறிவிப்பு பலகை வைக்கப்படல் வேண்டும்.

2. பார்வை 3–ல் காணும் விவரப்படி இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களின் உத்திரவுடன் இணைத்து வரப்பெற்ற மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்படுவதாக மனுதாரரால் மதுக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ரூ.100/–மதிப்புள்ள முத்திரைத்தாளில் நிபந்தனை பத்திரம் பதிவு செய்யப்பட்டு பேரூராட்சிக்கு இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்படை செய்யப்படவேண்டும். மேலும் மேற்படி மனைப்பிரிவில் மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்படவேண்டும்.

3. இம்மனைப்பிரிவில் உள்ள மனைகள் விற்பனை செய்யும் பொருட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரயம் செய்யப்படும் பொழுது, கிரயப்பத்திரத்தின் ஒரு அங்கமாக வரைபட நகலையும் இணைத்து கிரயம் செய்து கொடுக்கப்படவேண்டும்.

4. மனைப்பிரிவு உரிமையாளர், மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளபடியே மனைகள் விற்கப்படவேண்டும். விதிமுறைகளுக்கு முரணாக ஒரு மனையிடத்தை பகுதியாக பிரித்து விற்பனை செய்யக் கூடாது.

5. இம்மனைப்பிரிவில் மனுதாரால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப்பணிகளில் குறைபாடுகள் ஏதும் கண்டறியப்பட்டால் மனைப்பிரிவு உரிமையாளர் நிபந்தனைகள் ஏதும் இன்றி தனது சொந்த செலவில் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

6. மனைப்பிரிவு உரிமைதாரர் இவ்வுத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், விதிமுறைகளுக்கும் முரணாக செயல்பட்டால் இவ்வுத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி செயல் அலுவலரால் ரத்து செய்யப்படும்.

7. ஒவ்வொரு அரையாண்டும் (VLT) காலியிடவரி மனை உரிமையாளரால் செலுத்தப்படவேண்டும், மனை விற்பனை செய்யப்பட்டவுடன் உரிமையாளர் விவரம் பேரூராட்சிக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

28/6/2021

செயல் அலுவலர்
மதுக்கரை சிறப்புநிலை பேரூராட்சி
கோயம்புத்தூர்–641105.

28/6/21

28/6/21

இணைப்பு

1) முத்திரையிட்ட வரைபடம்
2) நிபந்தனை படிவம்

பெறுநர்

திரு. R. வசந்தகுமார் மற்றும் திருமதி. V. தமயந்தி
க.எண்.14 எல்.ஜி.பி காலனி
சிட்கோ, கோயம்புத்தூர்–641021.

நகல்

1) இணை இயக்குநர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மதுக்கரை.
3) தலைவர், தமிழ்நாடு நில விற்பனை ஒழுங்கு முறை ஆணையம், எழும்பூர், சென்னை